கலைஞானச்சுடர், கலாபூஷணம் எஸ்.பெருமாள் வழங்கும்
சிறுவர்களுக்கான ஒரு வில்லுப்பாட்டு

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்



M29-7

கலைஞானச்சுடர், கலாபூஷணம் திரு.எஸ்.பெருமாள்
வழங்கும் சிறுவர்களுக்கான ஒரு வில்லுப்பாட்டு

# எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

மறுயுகம் வெளியீடு

நூல் : **எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்?**
சிறுவர்களுக்கான ஒரு வில்லுப்பாட்டு
eththanai kalamthaan emattuvar
ஆசிரியர் : எஸ்.பெருமாள் (முன்னாள் ஆசிரியர்- ஈழநாடு பத்திரிகை)
முகவரி : 13A- 1/3, புளூடி ஒழுங்கை, அரியாலை, யாழ்ப்பாணம்
பதிப்புரிமை : © ஆசிரியருக்கே
முதற்பதிப்பு : 2018 செப்டம்பர்
வடிவமைப்பு : மறுயுகம், யாழ்ப்பாணம். maruyuham@gmail.com
அச்சுப்பதிப்பு : ஜெயஸ்ரீ பிறிண்டேர்ஸ், பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
விலை : ரூ.160/-
**ISBN No: 978-955-7286-02-0**

## அர்ப்பணம்

வாழ்க்கை எனும்
வயல் நிலத்தின்
வரம்பில் கூட
கால் பதித்துமறியாத
பிஞ்சு வயதினிலே
போர்க் கொடுமைக்கு
ஆளாகி உயிர் துறந்த
எங்களது சின்னஞ்
சிறுசுகளின் ஆன்ம
சாந்திக்கு இந்நூல்
அர்ப்பணம்.

- ஆசிரியர்

## ஒரு வார்த்தை

பரதநாட்டியம், தமிழ் இசை இவை போன்ற தமிழ் கிராமிய கலைவடிவங்களில் வில்லுப்பாட்டு அல்லது வில்லிசையானது தமிழரின் பாரம்பரிய தனித்துவமிக்க கலைப் பொக்கிஷங்களில் ஒன்றாகும். எனவே அதன் பாரம்பரியம் நெறிகெடாமல் பாதுகாத்து பேணப்பட வேண்டும் என்று இத்துறை சார்ந்த கலைஞர்களும் புலவர்களும் அங்கலாய்ப்பதில் நியாயமுண்டு.

இக்கலையானது மிகப் பிந்திய காலத்திலேயே இலங்கை நாட்டில் அறிமுகமானது. கதாகாலட்சேபம் என்ற வகையிலான கதைகூறும் வடிவம் ஏற்கனவே கோயில் திருவிழாக்களின்போது அத்துறை வல்லுனர்களால் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. இது பெரும்பாலும் புராண தெய்வீகக்கதைகள், சிவதொண்டர்களின் பக்திநெறிகளோடு தொடர்புடைய கதைகளையும் பாடல்களையும் மையமாக வைத்தே பாடும் திறம்படைத்த விற்பன்னர்களால் வழங்கப்பட்டுவந்தன. இந்தக் கதா காலட்சேபமானது தமிழ்மொழியில் மட்டுமின்றி ஏனைய தென்னாட்டு மொழி வல்லுனர்களாலும் தங்கள் மொழிகளில் வழங்கப்படுகின்றது. ஆனால் வில்லுப்பாட்டு தமிழிற்கும் தமிழ்மொழி வல்லுனர்களுக்கும் மட்டுமே உரித்துடையதாகக் காணப்படுவது தமிழ் கலை பண்பாட்டுக்குரிய சிறப்பம்சங்களில் ஒன்றாகும்.

ஆரம்பத்தில் மாஸ்டர் சிவலிங்கம் இக்கலையை கிழக்கிலங்கையில் அறிமுகப்படுத்தி வேறுபல பகுதிகளுக்கும் பரப்பியிருந்தார். நாடகக் கலைஞரான லடிஸ் வீரமணி வில்லுப்பாட்டினை கொழும்பில் பல மேடைகளில் நிகழ்த்தி அதன் பெருமையை நிலைநாட்டியதுமட்டுமின்றி நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் எடுத்துச் சென்று பரப்பினார். ஈழத்து புகழ்பெற்ற கவிஞர்களில் ஒருவரான 'மகாகவி' அவர்களால் எழுதி வழங்கப்பெற்ற வில்லுப்பாட்டான கண்மணியாள் காதை லடிஸ் வீரமணியால் நாடு முழுவதும் அரங்கேற்றப்பட்டு புகழ்பெற்றது. வடக்கிலும் கிழக்கிலும் வேறு பல கலைஞர்களாலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுவந்துள்ளன. குறிப்பாக யாழ்ப்பாணம் சின்னமணி, திருப்பூங்குடி ஆறுமுகம் போன்ற கலைஞர்கள் வில்லிசைக்கு பேர்போனவர்களாக இருந்துள்ளனர். இப்பொழுதும்கூட இராசையா ஸ்ரீதரன் போன்ற கலைஞர்கள் வில்லிசை நிகழ்ச்சிகளை நடத்திவருகின்றனர்.

பெண்களின் கலைமன்றங்களும் இதில் இப்போது கவனம் செலுத்துவது கவனிக்கத்தக்கது. பெரும்பாலும் புராதன கதைகள், காவியப்பிரிவுகள், சமயக்கதைகள், சமயப் பெரியார்களின் வரலாறுகளே வில்லுப்பாட்டில் வழங்கப்பட்டுவந்துள்ளன. சமீப காலத்தில் நவகால பெரியோர்களின் வரலாறுகளும் சிறப்பாக இடம்பெற்று வருவது மகிழ்ச்சிதருவதாகும்.

அந்தவகையில் மதிப்புக்குரிய கலாபூஷணம் சைவப்புலவர் க.செல்லத்துரை அவர்கள் அற்புதமான வில்லுப்பாட்டுக்களை எழுதிவழங்கியுள்ளார். புலவர் அவர்களின் துணைவியார் திருமதி சிவகாமசுந்தரி அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவாக வெளியிட்டிருந்த 23 வில்லுப்பாடல்கள் அடங்கிய நூலில் விபுலானந்த அடிகள் மற்றும் ஆறுமுகநாவலர் போன்ற ஈழத்துத் தமிழ்ப் பெரியோர்களின் வரலாறுகளை மிக அழகாகவும் அற்புதமாகவும் எழுதி வழங்கியிருப்பதைக் காணமுடிந்தது. இவை போன்ற படைப்புகள் நிறையவே தமிழில் இடம்பெற வேண்டும்.

வில்லுப்பாட்டில் நகைச்சுவை அவசியமா என்று சிலர் கேட்கிறார்கள். இன்னும் சிலர் வில்லுப்பாட்டு என்றாலே நகைச்சுவைதான் என்ற நிலைமையை ஏற்படுத்திவருகிறார்கள். சொல்லப்படும் கதையின் சுவாரஷ்யம் கெடாமலும் திசைதிரும்பாமலும் நகர்வதற்கு நகைச்சுவை சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப பயன்படுத்தப்படுவதே சிறப்பு. அதனையே நானும் வரவேற்கின்றேன்.

மிருகங்களையும் பறவைகளையும் மனிதர்கள் போல் பேசும், செயல்படும் பிராணிகளாக உருவகித்து வழங்கப்படும் நீதிக் கதைகள் நம் மத்தியில் ஏராளமுண்டு. அந்த வகையில் நரியை மையமாகக் கொண்டு கதைகளை சிறுவர்கள் வில்லுப்பாட்டாக வழங்கும் வகையில் இந்த ஆக்கத்தை உருவாக்கியுள்ளேன். இளைஞர் கழகங்கள், மாணவர் மன்றங்கள் போன்றவை பயன்படுத்திக் கொள்வார்களானால் மகிழ்ச்சியடைவேன்.

நன்றி.

**எஸ்.பெருமாள்**
**கலைஞானச்சுடர், கலாபூஷணம்**

13A-1/3, புருடி ஒழுங்கை
அரியாலை
யாழ்ப்பாணம்
இலங்கை. ☎021 222 3600

"KALAA POOSHANAM"
K.S. ... ANARAJAH
R... VICE PRINCIPAL
A... PATHAM ROAD
KOKUVIL WEST

# சிறுவர்களுக்கான ஒரு வில்லுப்பாட்டு

## தலைப்பு: எத்தனை காலம்தான் ஏமாற்றுவார்!

### காப்பு

தந்தன தோம் என்று சொல்லியே
வில்லினில் பாட வில்லினில்பாட
வந்தருள்வீர் கணபதியே
வந்தருள்வீர் கணபதியே

வந்தருள்வீர் கணபதியே - வரம்
தந்தருள்வீர் கணபதியே - வரம்
தந்தருள்வீர் கணபதியே - சபைதனில்
முந்திவந்து அமர்ந்திடுவீர் - சபைதனில்
முந்திவந்து அமர்ந்திடுவீர் - சுவாமி
முத்தமிழின் வித்தகரே - சுவாமி
முத்தமிழின் வித்தகரே - ஐயா
நத்தி உமை தோத்தரித்தோம் - ஐயா
நத்தி உமை தோத்தரித்தோம் - சுவாமி
நல்லாசி தாருமையா- சுவாமி
நல்லாசி தாருமையா
வில்லினில் பாட வில்லினில் பாட
நல்லாசி தாருமையா

**குழுத்தலைவர்:** பெரியோர்களே! தாய்மார்களே! தந்தைமார்களே!
அண்ணன்மார்களே! அக்காமார்களே! தம்பிமார்களே!
தங்கைமார்களே!
(இசையுடன்)
வந்தனம் தந்தனமே
வந்திருக்கும் அனைவர்க்கும்
வந்தனம் தந்தனமே

**அனைவரும்:** (மறுபடி) வந்தனம்......

**தலைவர்:**
**(வசனம்)** கதை சொல்லப்போகும் நாங்கள் அனைவரும்
இளையோர்கள், வயதிலும் அனுபவத்திலும்
குறைந்தவர்கள். அதனால் எங்கள் தரப்பில் ஏதும்
குறைகள் இருந்தால்,

**உதவி 1:** குற்றம் இருந்தால் குளறுபடி இருந்தால்,

**உதவி 2:** பிழை இருந்தால் பிசகு இருந்தால்

**குழுத்தலைவர்:** பெருந்தன்மையோடு மன்னித்து மகிழ்வோடு
ஆசீர்வதிக்கும்படியாக பணிவோடு
கேட்டுக்கொள்கின்றோம். வணக்கம்!

**உதவி 1:** வந்தனம்

**உதவி 2:** நமஸ்காரம்

**குழுத்தலைவர்:**
**(பாட்டு)** நல்ல நாடு இது நல்ல நாடு
நால்வகை செல்வங்களும் கொண்ட நாடு

**உதவி:** (மறுபடி) நல்ல....

**குழுத்தலைவர்:** சொல்லேர் உழவர்கள் நிறைந்த நாடு இது
சொர்க்கம்போல் பூமியில் திகழும் நாடு

**உதவி:** (மறுபடி) சொல்லேர்....

**குழுத்தலைவர்:** **(வசனம்)** இவ்வாறு திகழ்கின்ற நல்ல நாட்டினிலேவாழ்கின்ற அனைத்து மக்களுக்கும், நன்கு அறிமுகமான ஒரு மிருகத்தை முதன்மையாகக் கொண்ட நீதிக் கதையினை இன்று இங்கே வழங்குவதற்கு வந்திருக்கின்றோம்.

**உதவி:** எல்லாருக்கும் அறிமுகமான மிருகமா அது என்ன மிருகமையா?

**குழுத்தலைவர்:** கபடத்துக்கு அதிபதியும்

**உதவி:** கபடத்துக்கு அதிபதியும்

**குழுத்தலைவர்:** தந்திரத்திற்கு தளபதியும்

**உதவி:** (மறுபடி) தந்திரத்திற்கு தளபதியும்

**குழுத்தலைவர்:** ஏமாற்றி பிழைப்பதிலே ஏகாதிபதியுமான நரியை முதன்மையாகக் கொண்ட ஒரு நீதிக் கதையை இன்று உங்களுக்கு வழங்குவதற்கு முன்வந்திருக்கிறோம்.

**உதவி:** நரியின் கதையா? நரிக்கும் நமக்கும் என்ன ஐயா சம்பந்தம்?

**குழுத்தலைவர்:** சம்பந்தம் இல்லாமலில்லை -
நரியை விட தந்திரமும் கபடமும் கெடுபுத்தியுமுள்ள மனிதர்கள் எத்தனையோ பேர் நம் மத்தியில் உலவுகிறார்கள் என்பதை அறிவீரா?

**உதவி 1:** ஆமாம்! ஆமாம்! ஏமாற்றுவதில் எத்தித் திருடுவதில் கைமோசம் புரிவதில் கபடம் செய்வதில், நயவஞ்சகம் செய்வதில்,

**உதவி 2:** நன்றிமறப்பதில், நரிகள் இவர்களிடம் பிச்சை வாங்கணும் போங்கள்!

**குழுத்தலைவர்:** அதனால் இன்று நரியை முதன்மையாகக்

கொண்ட சில கதைகளை சொல்லப் போகிறோம் கேளுங்கள்.

**உதவி 1:** அப்படியா ஆகட்டும்! ஆகட்டும்!

**குழுத்தலைவர்:** ஒரு ஊரில் ஒரு பாட்டி இருந்தாவாம். ஒருநாள் அவ முற்றத்தில் வடை சுட்டுக்கொண்டிருந்தாவாம்.

**உதவி 1:** அவ சுட்டுவைத்த ஒரேயொரு வடையை ஒரேயொரு காகம் வந்து திருடிக்கொண்டு போனதாம்.

**உதவி 2:** இது என்ன பழைய பாட்டி வடை சுட்ட கதைதானே? இதிலே புதுமை என்ன இருக்கு?

**குழுத் தலைவர்:** கதைகள் எல்லாமே பழசுதான். ஆனால் இதிலே கொஞ்சம் புதிசையும் சேர்த்து வித்தியாசமாய்ச் சொல்லப் போகிறோம். அவ்வளவுதான்.

**உதவிகள்:** ஆகா அப்படியா, பேஷா சொல்லுங்கோ!

**குழுத்தலைவர்:** வடையைத் திருடிய காகம் பறந்து சென்று அருகாமையிலுள்ள ஒரு காட்டின் ஓரத்தில் பெரியமரம் ஒன்றின் கிளையில் அமர்ந்தது. அந்த வேளை பார்த்து நரியொன்று அந்த வழியாக வந்து கொண்டிருந்தது.

**உதவி 1:** ஆமாம், ஆமாம் அந்த நரிதான் நமது இன்றைய கதைகளின் நாயகன் அல்லவா?

**உதவி 2:** நரி என்றாலே தந்திரம், ஏமாற்றல், வஞ்சகம் போன்ற பல குணங்களுக்கு சொந்தக்காரனாக உருவகப்படுத்தப்பட்ட பல கதைகள் நம் மத்தியில் உண்டு.

**உதவி 1:** கொக்குக்கு தட்டையான கோப்பையில் உணவு பரிமாறி அவமானப்படுத்தியது, தொண்டையில் சிக்கிய எலும்புத் துண்டை எடுத்துவிட்டால் பரிசு

தருவதாகக் கூறி ஏமாற்றியது. இப்படி ஏகப்பட்ட நரிக் கதைகளை நாம் அறிவோம்.

**குழுத்தலைவர்:** ஒரு சமயம் இந்த நரியார் தண்ணீர் அருந்துவதற்காக ஓர் ஆற்றங்கரையில் இறங்கினார். அந்த சமயம் தண்ணீருக்குள் இருந்த முதலையொன்று நரியின் ஒரு காலை லபக் என்று கவ்வி பிடித்துக்கொண்டது.

**உதவி 1:** தொலைஞ்சாரா நரியார்?

**குழுத்தலைவர்:** அதுதான் இல்லை. நரிக்கு தந்திரம் மட்டுமல்ல சமயோசித புத்தியும் உண்டு கண்டியளோ. அதனால் அசையாமல் அப்படியே நின்றுகொண்டு நரி சொல்லும்,

**(பாட்டு)**

தண்ணீருக்குள்ளிருக்கும் முதலைகளுக்கெல்லாம் மூளையே கிடையாது.

**உதவி 1:** ஆமாம் மூளையே கிடையாது.

**குழுத்தலைவர்:** பெரியோர் சொன்ன வார்த்தையாம் இதிலே பிசகே கிடையாது.

**உதவி :** பிசகே கிடையாது

**குழுத்தலைவர்:** கண்கள் இருந்தால்தானே எதையும் கண்டு அறிந்து கொள்ளலாம்.

**உதவி:** ஆமாம், கண்டு அறிந்து கொள்ளலாம்.

**குழுத்தலைவர்:** கண் இருந்தாலும் கபோதிகள் கூட்டம் ஒன்றுமே புரியாது.

**உதவி 1:** ஆமாம் இதுகளுக்கு ஒன்றுமே புரியாது.

**குழுத்தலைவர்:** கால் என்று நினைத்துக்கொண்டு மரத்தின் வேரை

கவ்வியே பிடித்து இழுக்கும்

**உதவி:** கவ்வியே பிடித்து இழுக்கும்

**குழுத்தலைவர்:** இதைப் பார்க்கும்போது சிரிப்பு தாங்க முடியலை. வயிற்றிலும் வலி எடுக்கும். (கெக்கலிபோட்டு சிரித்தல்)

**உதவி:** ஆமாம் எனக்கும் தலை வலிக்கும்.

**குழுத்தலைவர்: (வசனம்)** தண்ணீருக்குள் இருக்கும் முதலைக்கெல்லாம் மூளையும் கிடையாது, கண்ணும் தெரியாது என்று பெரியவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது உண்மைதான் என்பது இப்போதுதான் புரிகிறது. இங்க பாருங்க ஒரு முதலை என் கால் என்று நினைத்துக்கொண்டு ஆலமரத்து வேரைப் பற்றிக்கொண்டு மல்லுக்கட்டுது என்று சொல்லி நரி சிரித்தது.

**உதவி:** ஆமாம் நரி சிரித்தது.

**குழுத்தலைவர்:** நரியின் கதையை நம்பிய முதலை அதன் காலை விடுத்து பக்கத்தில் தெரிந்த ஆலமரத்தின் வேரைக் கவ்வி இழுக்கத் தொடங்கியது.

**உதவி 1:** தப்பித்தோம் பிழைத்தோம் என்று சொல்லி நரியும் தண்ணீரிலிருந்து தாவி மேடான பகுதிக்கு வந்து சேர்ந்தது.

**குழுத்தலைவர்:** தந்திரத்தின் மூலம் காட்டு மிருகங்களை மிக வசதியாக அடித்து சாப்பிட்டு வயிறு வளர்த்து வந்தது ஒரு கொடூரமான சிங்கம். அந்தக் கொடூர சிங்கத்திடமிருந்து எவ்வாறு நரி தனது தந்திரத்தைப் பிரயோகித்துத் தப்பியது என்பதற்கு ஒரு கதையுண்டு சொல்கிறேன் கேட்கிறீர்களா?

உதவி: ஆகா பேஷா சொல்லுங்கோ, கேட்போம்.

குழுத்தலைவர்: அடர்த்தியான ஒரு பெருங்காடு.
(இசைநடை) யானைகள், புலிகள், கரடிகள் மற்றும் மிருகங்களுக்கு அதுவே சிறந்த வீடு, அந்தக் காட்டை ஆட்டிப் படைத்து வந்தது ஒரு சிங்கம். அதை அடக்க முயன்றவர்கள் எல்லாருக்கும் கிடைத்ததெல்லாம் அசிங்கம்

உதவி: ஆமாம் கிடைத்ததெல்லாம் அசிங்கம்.

குழுத்தலைவர்: அது கர்ஜித்தால் அந்தக் காடே அதிரும். பெரிய
(இசைநடை) உருப்படி மட்டுமல்ல எதற்கும் அஞ்சாத பலசாலி. வெளியில் புறப்பட்டால் தன் கண்ணில் அகப்படும் மிருகம் எதுவென்றாலும் அடித்துச் சாப்பிடாமல் விடாது. அதனால் ஏனைய மிருகங்கள் எல்லாம் பயந்தும், நடுங்கியும் பதுங்கியுமே வாழ்ந்து வந்தன.

உதவிகள்: ஆமாம் பயந்தும் நடுங்கியும் பதுங்கியுமே வாழ்ந்து வந்தன.

குழுத்தலைவர்: இப்படி இருக்கும்போது, அந்த சிங்கத்துக்கும் வயது அதிகரித்து முதுமை தோன்றத் தொடங்கிவிட்டது. இது எல்லா ஜீவராசிகளுக்கும் உள்ள நியதிதான். இளமையில் உள்ள முறுக்கும் மிடுக்கும் துடிப்பும் வயது ஏறஏற இருந்த இடம் தெரியாமல் மறைந்து போய்விடும். சிங்கத்தின் கண் பார்வை குறையத் தொடங்கிற்று. பற்கள் ஆடத் தொடங்கிவிட்டன. கால்களில் நகங்கள் கழன்றுவிழத் தொடங்கிவிட்டன. வெளியில் சென்று வேட்டையாடுவதும் கஷ்டமாகப் போய்விட்டது. அதனால் சிங்கம் தன் இருப்பிடமான குகையிலேயே முடங்கவேண்டிய காலம் வந்துவிட்டது.

**உதவி 1:** ஆமாம். அப்ப சாப்பாட்டுக்கு என்ன வழி?

**உதவி2:** அதற்கும் ஏதாவது வழி கண்டுபிடித்திருக்குமே?

**குழுத்தலைவர்:** சிங்கம் யோசனை செய்தது. குகையில் இருந்தபடியே மிருகங்களை உள்ளே வரவழைத்து அடித்துச் சாப்பிடுவது என்று திட்டம் தீட்டியது.

**உதவி:** ஆமாம் அப்படி ஒரு திட்டம் தீட்டியது.

**குழுத்தலைவர்:** முதலில் எந்த ஒரு மிருகமும் சிங்கத்தின் குகையின் பக்கம் வரவேயில்லை. பிறகு முழுக்காட்டையுமே அச்சத்தில் ஆழ்த்திவந்த சிங்கத்தை வெளியில் காணாததால் மிருகங்கள் எல்லாம் அதற்கு ஏதோ சங்கடம் ஏற்பட்டிருக்க வேண்டும். அதனால்தான் வெளியில் வரக்காணோம் என்று பேசிக்கொள்ள ஆரம்பித்தன.

**உதவி:** சிங்கத்தை வெளியில் காணாதது ஒரு வகையில் அவைகளுக்கு சந்தோஷமாகத்தானே இருந்திருக்கும்

**குழுத்தலைவர்:**
**(இசைநடை)**
இப்படியிருக்கும்போது புள்ளிமான் ஒன்று
துள்ளிதுள்ளி ஓடிவந்து சிங்கத்தின்
குகைப்பக்கம் நின்று அதற்கு என்னதான்
நடந்திருக்கும் என்பதை அறியமுடியுமா
என்று எட்டி எட்டிப் பார்த்தது. சிங்கம் படுத்து கிடப்பது
தெரிந்தது உடனே ஓடிவிட
எத்தனித்தது அந்தவேளை

**(உரத்த குரலில்)**

*மானே பயந்து ஓடிவிடாதே*
*நான் உன்னை ஒன்றும் செய்துவிடமாட்டேன்*
*அப்படியே நில்*
*என்ற சிங்கத்தின் அதட்டல் கேட்டது*
*மானும் மிரண்டுபோய் அப்படியே நின்றது*

*சிங்கத்துக்கு ஒரு விஷேட குணம் உண்டு கண்டியளோ!*

**உதவி 1:** அது என்ன விசேட குணம்
ஏனைய மிருகங்களுக்கு
இல்லாத குணம்?

**குழுத்தலைவர்:** மிருகமொன்று தனக்கு அருகாமையில் மறைந்து நின்றாலும் கூட, அது என்ன மிருகம்? எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதை அந்த மிருகத்தின் வாடையைக் கொண்டே கண்டுபிடித்துவிடுமாம்.

**உதவி:** ஆகா! அப்படி ஒரு விசேட குணம் அதற்கு!

**குழுத்தலைவர்:** எனவே மான் ஒன்று தன் குகைக்கு அருகில் வந்து நின்றவுடன் சிங்கத்துக்கு நாக்கில் நீர் ஊறத்தொடங்கிவிட்டது. இருந்தாலும் தன்னை சிரமப்பட்டு கட்டுப்படுத்திக்கொண்டு மானை எப்படியும் உள்ளே வரவழைத்துவிட எண்ணியது. எனவே,

**(பாட்டு)**

எங்கே வந்தாய் புள்ளிமானே - இந்த
சிங்க ராசா இருக்கும் நிலையை
பார்த்துப் போக வந்தாயோ!

**உதவிகள்:** (மறுபடியும்) எங்கே வந்தாய்....

**குழுத்தலைவர்:** பல்லெல்லாம் ஆடலாச்சுது - கால்களில்
நகங்களுமே கழன்று போச்சுது
கண்கள் மங்கிடலாச்சுது - எழுந்து
நடக்கவுமே மூச்சுவாங்குது

**உதவிகள்:** (மறுபடியும்) பல்லெல்லாம்....

**அனைவரும்:** எங்கே வந்தாய்.....

**குழுத்தலைவர்:** படுத்த படுக்கையாகிப் போனேனே - பிறர்
பார்க்கவும் பரிதாபமானேனே

**அனைவரும்:** படுத்த படுக்கை....
எங்கே வந்தாய்...
தந்தன தந்தன தானானே - தானானே
தானதந்த தான தந்தனானே
(மறுபடியும்) தந்தன....

**குழுத்தலைவர்:** சிங்கத்தின் இந்த பசப்பு வார்த்தைகளில்
மயங்கிப் போன புள்ளிமான் சொல்லும்.
**(பயந்து நடுங்கும் குரலில்)**
மகாராசாவே சில நாட்களாகவே உங்களை
வெளியில் காணாமையால் மிருகங்கள் எல்லாம்
ஏதேதோ பேசிக்கொள்கின்றன. அதனால்தான்
உங்கள் நிலையைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று
வந்தேன். உடல் தள்ளாத நிலையிலும்
வேட்டையில்லாமல் எவ்வாறு உங்களால் உயிர்வாழ
முடிகிறது
என்று அறியலாமா? என்று கேட்டது.

**அப்போது சிங்கம் சொல்லும்.**

மானே தெரியாதா உனக்கு நான் இப்போதெல்லாம் மாமிசம் உண்பதில்லை. பழங்கள்,பயறு,கிழங்கு ஏன் புல்லைக்கூட தின்கின்றேன். அதுவும்கூட உன்னைப்போல யாராவது கொண்டுவந்து போட்டால்தான் இல்லையென்றால் வெறும் பட்டினி விரதம்கூட இருக்கிறேன். நம்பு. எவரையும் இம்சிப்பதில்லை. அகிம்சாவாதியாகிவிட்டேன் என்று கூறிவிட்டு, மானே உனக்கு இன்னமும் சந்தேகம் தீரவில்லையா?

வா மானே உள்ளே வா!
வந்துபார் என் நிலையை
வந்தாரை வதைப்பதில்லை நான்

சேர்ந்தாரை சிதைப்பதில்லை
என்று மிகப் பரிதாபமாகப் பேசியது

**அப்போது மான் சொல்லும்.**

மகாராசா உங்கள் வார்த்தைகளை நூறு வீதம் நம்புகிறேன். உங்கள் அருகில் வந்து பார்க்காமல் போனால் நான் பெரும் பாவியாகிவிடுவேன். என்று கூறியபடி குகையில் சிங்கம் படுத்திருக்கும் இடத்துக்கருகில் சென்றது. அதுவரை பரிதாபகரமாகப் படுத்து பாசாங்கு செய்து கொண்டிருந்த சிங்கம்..

**உதவி 1:** "லபக்" என்று மானின் மீது பாய்ந்தது.

**உதவி 2:** "குபுக்" என்று அடித்துக்கொன்று தின்றது.

**குழுத்தலைவர்:** மானின் கதை அத்துடன் முடிந்தது.
இப்படியாக சிங்கமானது தனது குகைக்கருகில் வரும்
மிருகங்களை தந்திரமாக உள்ளே வரவழைத்து
அடித்து சாப்பிட்டு உயிர் வாழ்ந்துவந்தது.
ஒருநாள்
அந்தக் காட்டில் வாழ்ந்த நரியாரும் சிங்கராசாவைப்
பார்த்து சுகம் விசாரித்துப் போவதற்காக அங்கு
வந்தார். வந்தவர் குகைக்கு அருகில் போகாமல்
சற்றுத் தூரத்திலிருந்தே நோட்டம் விடலானார்.

**உதவி:** வந்திருக்கும் மிருகம் எது என்பதை சிங்கம்
தனது மோப்ப சக்தியால் அறிந்து கொண்டிருக்குமே!

**குழுத்தலைவர்:** சிங்கமானது குகைக்குள்ளிருந்தே, ஓ வாரும்
நரிப்பிள்ளையாரே,
என்ன இவ்வளவு தாமதம் காட்டிலுள்ள மிருகங்கள்
எல்லாம் அவ்வப்போது இங்கு வந்து என்னை சுகம்
விசாரித்துக் கொண்டுபோகின்றன. ஆனால் நீர், நான்
இதுவரை காலமும் அடித்துப்போடும் மிருகங்களின்

மிச்சசொச்சங்களை திருட்டுத்தனமாக உண்டு வயிறு வளர்க்கும் நீர் இந்தப் பக்கமே தலைவைத்தும் படுக்கவில்லையே. தள்ளாத வயதில் படுத்த படுக்கையாக இருக்கும் இந்த கிழட்டு ராஜாவை ஒரு தடவை வந்து பார்க்க வேண்டும் என்றுகூட உமக்குத் தோன்றவில்லையே என்று மிக உருக்கமாகவும் பரிதாபம் ஏற்படும் வகையிலும் பேசியது.

**உதவி:** ஆமாம் ஆமாம் மிகப் பரிதாபமாகவே பேசியது.

**குழுத்தலைவர்:** அப்போது நரி சொல்லும்.,
மகாராசா மன்னித்துக்கொள்ளுங்கள். பக்கத்துக் காட்டிலே ஒரு விசேசம், அது என்னவென்றால் என் மனைவியின் சகோதரிக்கு கலியாணம்.

**உதவி 1:** அதாவது எனது மச்சாளுக்கு

**உதவி 2:** அதாவது எனது கொழுந்தியாருக்கு கலியாணம்.

**குழுத்தலைவர்:** அன்றைய தினம் எல்லா இடங்களிலும் ஒரே சமயத்தில் வெயிலும் அடித்தது, மழையும் பெய்தது நீங்கள் கவனித்திருப்பீர்களே!

**உதவி:** ஆமாம், அதனால்தான் அன்றையதினம் நரிக்கும் - நரிக்கும் கலியாணம் என்று எல்லாரும் பேசிக்கொண்டார்கள்.

**குழுத்தலைவர்:** அந்தக் கலியாணத்துக்கு நான் அவசியம் போக வேண்டியிருந்தது. அதனால் உங்கள் நிலையைப் பற்றி அறிய என்னால் முடியாமல் போய்விட்டது. இன்று காலையில்தான் திரும்பினேன். நீங்கள் இப்போதெல்லாம் வெளியில் வருவதே இல்லையென்று அறிந்ததும் உங்களைப் பார்ப்பதற்காக ஓடோடிவந்தேன் என்றது.

**உதவி:** ஆமாம் இதைக் கேட்ட சிங்கராசா பெரிதும் மகிழ்ந்துபோய் இருப்பாரே!

**குழுத்தலைவர்:** அதைக் கேட்பானேன்

**(பாட்டு)**

வந்தாயே
இப்பொழுதாகிலும்
வந்தாயே

**உதவி:** (மறுபடி) வந்தாயே......

**குழுத்தலைவர்:** இந்த உடலை விட்டு
உயிர் எப்போது
போகும் தெரியாதே

**உதவி:** (மறுபடி) இந்த உடலை....

**குழுத்தலைவர்:** இந்த நிலையிலாகிலும்
வந்தாயே என் நண்பனே!

**உதவி:** (மறுபடி) இந்த.....

**குழுத்தலைவர்:** கரியும், பரியும்
வரியும் வந்து எனது
எரியும் பசிக்கு
மருந்து தந்தார்களே
நரியே!
இப்போதாகிலும் வந்தாயே
உன்வரவால் மகிழ்ந்தேனே

**உதவி:** (மறுபடி) கரியும்..

**குழுத்தலைவர்:** நரி நண்பனே!
உள்ளே வா
வந்து பார்த்துவிட்டு
போ நண்பனே!

**உதவி:** (மறுபடி) நரி நண்பனே...

**குழுத்தலைவர்:** இவ்வாறு சிங்கமானது மிகப் பரிதாபமாகவே வேண்டிக்கொண்டது

**உதவி:** ஆமாம்! வேண்டிக்கொண்டது.

**குழுத்தலைவர்:** அப்பொழுது நரி மேலும் சற்று முன்னே சென்று குகையின் நாலா பக்கமும் பார்வையைச் செலுத்தி மிக நன்றாக நோட்டம் விட்டது.
உடனே சிங்கம்,
என்ன இப்படி கண்ணாலாலேயே குகையைத் துளாவித் துளாவி பார்க்கின்றாய்? சந்தேகம் இன்னும் தீரவில்லையல்லவா அப்படியானால் தாராளமாக உள்ளேயே வந்து பார்க்கலாமே. எழுந்திருக்கவும் முடியாமல் நான் கிடப்பதைப் பாரப்பா நண்பனே என்னை நம்பப்பா இந்த ராசா சொல்வதைக் கேளப்பா என்றது

**உதவிகள்:** (மறுபடி) நான் கிடப்பதைப்..

**குழுத்தலைவர்:** அப்போது நரி மேலும் சற்று பின்னால் நகர்ந்து கொண்டு சொல்லும்,
**(பாட்டு)**
தந்திரத்திலே நான் பெரும் போக்கிரி என்று
இந்தக் காடே கதைக்கிறது

**உதவி:** (மறுபடி) காடே கதைக்கிறது...

**குழுத்தலைவர்:** மந்திரச் சொல்லாலே என்னை
மடக்கிவிடலாமென்று உங்கள்
உள்ளம் துடிக்கிறது

**உதவி:** (மறுபடி) உள்ளம் துடிக்கிறது...

**குழுத்தலைவர்:** அதற்கு சிங்கம்,

உமது தந்திரத்துக்கு முன்னால் வேறு யாரும் நிற்க முடியாது. அதை நான் நன்கு அறிவேன் நண்பனே. ஆனால் தளர்ந்த உடலும் தள்ளாத வயதும் என்னை இங்கே படுக்கையில் கிடத்திவிட்டுள்ளன. இதைத்
தந்திரமென்றும்
மந்திரமென்றும் கூறலாமோ
என் சந்திரவதன
சுந்தர நண்பா - என்
கிட்டே வந்துதான் பாரேன்
என் அந்தரங்கம் எல்லாம்
அப்படியே தெரியும் என்றது

**உதவி:** (மறுபடி) இதைத் தந்திரமென்றும்....

**குழுத்தலைவர்:** அதற்கு நரி,

**(பாட்டு)**

அந்தரங்கம் எல்லாம்
அறிந்துகொண்டேனே
அரச சிங்கமே! கட்டித் தங்கமே உமது
அந்தரங்கமெல்லாம்
அறிந்துகொண்டேனே

**உதவிகள்:** (மறுபடி) அந்தரங்கம்....

**குழுத்தலைவர்:** பொங்குதே மனம் வெம்புதே - உமது
விந்தையான குணம்
என்னவென்று அறிந்து
பொங்குதே மனம் வெம்புதே

**உதவி:** (மறுபடி) பொங்குதே...

**குழுத்தலைவர்:** வந்த விலங்குகள் பலபலவாகும் - உள்ளே
சென்ற மிருகங்களும் அதே அளவாகும் -
வெளியில்

போன மிருகங்களின் எண்ணிக்கை எத்தனை
என்பதை இயம்பிடில் இங்கே
எவர் வரக்கூடும்? சிங்கமே கட்டித் தங்கமே

**உதவி:** (மறுபடி) வந்த விலங்குகள்...

**குழுத்தலைவர்:**
**(வசனம்)**
அந்தரங்கம் எல்லாம் அறிந்துகொண்டேனே. சிங்க ராசாவே உங்கள் குகைக்குள்ளே அவ்வப்போது சென்ற மிருகங்களின் கால் அடையாளங்கள் மிகத் தெளிவாகக் காணப்படுகின்றன. ஆனால் அவைகளில் ஒன்றாவது வெளியில் சென்றமைக்கான எந்தவொரு அடையாளத்தையும் காணவில்லையே! அவைகள் யாவும் உமது வயிற்றில் அடைக்கலமாகிவிட்டனவா பிரபு? இதுதானா உமது அந்தரங்கம்? என்று கேட்டுவிட்டு அதற்குமேல் அங்கு நிற்காமல் ஓட்டம் பிடித்தது.

**உதவி 1:** நரிக்கு தந்திரபுத்தியுமுண்டு
சமயோசித புத்தியுமுண்டு என்பது
சரியாகத்தான் இருக்கிறது.

**உதவி2:** அதனால்தான் சிங்கத்தின் தந்திரத்தை
முறியடித்து உயிர் தப்பிக்க முடிந்தது.

**குழுத்தலைவர்:** கெட்டவர்கள் என்னதான் நல்லவர்கள் போல்
நடந்துகொண்டாலும் அவர்களை அப்படியே
நம்பிவிடக்கூடாது மிக ஜாக்கிரதையாகவே
அவர்களுடன் பழக வேண்டும் என்பதைத்தான் இந்த
சம்பவம் நமக்கு எடுத்துக் காட்டுகின்றது.

**உதவி 1:** நரியின் தந்திரம் சமயோசிதம்
பற்றியெல்லாம் விரிவாக சொன்னீர்கள் ஆனால்
அது காகத்திடமிருந்து வடையைக் கவர்ந்த கதையை
அப்படியே விட்டுவிட்டீர்களே

**உதவி 2:** ஆமாம்! ஆமாம்! காகத்தை வடையுடன் நரி சந்தித்ததை மட்டும் சொன்னோம். அதற்குமேல் என்ன நடந்தது என்பதை சொல்ல வேண்டாமா?

**குழுத்தலைவர்:** பழைய கதையின்படி நரியின் புகழ்ச்சியான வார்த்தைகளைக் கேட்டுவிட்டு காகம் வாயைத் திறந்து கத்த வடை கீழே விழ நரி அதை எடுத்து சாப்பிட்டுவிட்டுப் போவதுதான் நமது வழமையான கதை. ஆனால் தந்திரக்காரனையே தனது தந்திரமான மதி நுட்பத்தால் காகம் தலை குனிய வைத்ததைப் பற்றித்தான் நாம் இப்போது சொல்லப்போகிறோம்.

**உதவி:** அப்படியா சங்கதி சொல்லுங்க! சொல்லுங்க!

**குழுத் தலைவர்:** வடையை வாயில் கவ்வியபடி மரக்கிளையில் அமர்ந்து இருந்த காகத்தைப் பார்த்து நரி சொல்லும்,

**(பாட்டு)**

காக்கை அண்ணாச்சியே
உமக்கு வந்தனம் சொன்னேன்
பல பல வந்தனங்கள்

**உதவி:** (மறுபடி) வந்தனம் சொன்னேன்...

**குழுத்தலைவர்:** கருங்காலி மரத்திலே
கடைந்தெடுத்தாற்போல
கண்ணாடியாய் மின்னும்
காக்கை அண்ணாச்சியே
வந்தனம் சொன்னேன்

**உதவி:** (மறுபடி) கருங்காலி மரத்திலே...

**குழுத்தலைவர்:** **(இசைநடை)**

காக்கை ஆடாமல் அசையாமல் அப்படியே இருந்து நரியைப் பார்த்தது. நரி மேலும் சொல்லும்,

கறுப்பாய் இருந்தாலும்
காக்கையாரே நீர் பார்க்க
அழகாகத்தான் இருக்கிறீர்
பார்க்கும் பார்வை அழகு

**உதவி:** அழகு

**குழுத்தலைவர்:** படபடவென செட்டையை
அடிக்கும்போதும் அழகு

**உதவி:** ஆமாம் அழகு

**குழுத்தலைவர்:** திருதிருவென கண்களை
உருட்டும் போதும் அழகு

**உதவி:** ஆமாம் அழகு

**குழுத்தலைவர்:** களவெடுத்தாலும் அழகு

**உதவி:** ஆமாம் அழகு

**குழுத்தலைவர்:** களவெடுத்ததைக் கடித்துத்
தின்னும்போதும் அழகு

**உதவி:** ஆகாகா அழகு

**குழுத்தலைவர்:** சொண்டும் அழகு

**உதவி:** அழகு

**குழுத்தலைவர்:** சொண்டைத் திறந்தாலும் அழகு

**அனைவரும்:** அழகு அழகு அப்படிப்பட்ட அழகு

**குழுத்தலைவர்:** இத்தனை அழகு படைத்த உமது குரலும்
அழகாகத்தான் இருக்கும்

**உதவி 1:** ஆமாம் அது தேனாகானமாகவல்லவா இருக்கும்

**உதவி 2:** அது எவரைத்தான் பரவசப்படுத்தாது!

**குழுத்தலைவர்:** அதனால்தான் கேட்கிறேன். மறுக்கவே வேண்டாம்
ஒருதரம், ஒரேஒரு தரம்
உமது அழகான வாயைத் திறந்து
பாடிவிடும். கேட்டுவிட்டு என்பாட்டில் சென்று
விடுகிறேன், "பிளீஸ்" என்று மன்றாடினார்.

**உதவி1:** அப்போ வழக்கம்போல காகமும் தன் வாயைத்
திறந்து காகா என்று பாடியிருக்கும்.

**உதவி 2:** வடை கீழே விழுந்ததும் அதை எடுத்து
சாப்பிட்டுவிட்டு காகத்துக்கு "வெவ்வே" என
வலிப்பம் காட்டிவிட்டு போயிருக்கும்

**குழுத்தலைவர்:** அதுதான் நடக்கவில்லை.
காகம் அப்படியே இருந்து சற்று யோசித்தது.
வாயைத் திறந்து காகா வென்று கத்தும் வடை
கீழே விழும் என்றுதான்
நரியும் அண்ணாந்தபடி நின்றது.

**உதவி1:** ஆமாம் அண்ணாந்தபடி நின்றது

**உதவி2:** பிறகு என்னதான் நடந்தது அறிய ஆவலாக
இருக்கிறது சொல்லுங்கள் ஐயா!

**குழுத்தலைவர்:** **(இசைநடை)**
காகம் சுற்றுமுற்றும் பார்த்தது.
மரக்கிளையில் ஒரு பொந்து தெரிந்தது.
அந்தப் பொந்துக்குள் பத்திரமாக வடையை
வைத்துவிட்டு கீழே நிற்கும் நரியைப் பார்த்து
என் குரலைத்தானே கேட்க விரும்பினாய்
கேட்டுக்கொள் என்று சொல்லி
"காகா" என்று பல தடவைகள் கத்திக் காட்டியது.

**உதவி 1:** நரிக்கு பெரிய ஏமாற்றமாகப் போயிருக்கும்.

**உதவி 2:** வெட்கத்தில் தலை தானே குனிந்திருக்கும்.

**குழுத்தலைவர்:** காகம் சொல்லும், - நானே அந்தப் பாட்டியிடம்
வடையைத் திருடிக்கொண்டு வந்திருக்கிறேன்.
என்னிடமே பசப்பு வார்த்தை பேசி
வடையை பிடுங்கிடப் பார்க்கிறாயா?
**(பாட்டு)** எத்தனை காலம்தான் ஏமாற்றுவீங்களடா
இந்தக் காட்டிலே!

**உதவி 1:** இந்த வீட்டிலே!

**உதவி 2:** சொந்த நாட்டிலே

**எல்லோரும்:** (மறுபடி) எத்தனை காலம் தான்...

**குழுத்தலைவர்:** பொய்யும் புரட்டுமே
வாழ்க்கை என்றாச்சு
பொறுக்கித் தின்பதே
பிழைப்பாகப் போச்சு

**உதவி:** (மறுபடி) பொய்யும்...

**குழுத்தலைவர்:** அரசியல்வாதி போல்
அழகாகப் பேச்சு
அகப்பட்டால் எமனுமே
பலகாரமாச்சு

**உதவி:** (மறுபடி) ஆமாம் எமனுமே பலகாரமாச்சு
(மறுபடி) எத்தனைகாலம்தான்...

**குழுத்தலைவர்:** காலம் மாறிப்போனதைக்
கண்டு கொள்ளாயோ
கம்பியூட்டர் யுகமிதை
மறந்து போனாயோ

**உதவி:** ஆமாம் மறந்துபோனாயோ..

(மறுபடி) எத்தனை காலம்தான்....

**குழுத்தலைவர்:** வாக்குச் சீட்டைப் போல
வடையை நினைத்தாயோ
வாங்கிடல் எளிதென
எண்ணம் கொண்டாயோ
போக்குக்காட்டியிதைப்
பிடுங்கிடுவாயோ
மூக்குடைபட்டபின்
முழுசுகின்றாயோ
ஏய்த்துப் பிழைப்பதை
இனிவிடுவாயோ
எத்தனை காலம்தான்
ஏமாற்றுவீர்களடா இந்த
காட்டிலே

**உதவிகள்:** எங்கள் வீட்டிலே
சொந்த நாட்டிலே

**குழுத்தலைவர்:** காகத்தின் எகத்தாளத்தை நரியினால் சகித்துக் கொள்ள முடியவில்லை. கேவலம் ஒரு காகத்திடம் மொக்கயீனப்பட்டு போனதை நினைத்து மிகவும் வெட்கப்பட்டது. கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளைக்கு என்பார்கள். இதுவரை எத்தனையோ மிருகங்களையும், பறவைகளையும் சாதுர்யமாக தந்திரத்தால் மடக்கி வெற்றி பெற்று வந்துள்ள நரிக்கு இச்சம்பவம் தலை குனிவை ஏற்படுத்திவிட்டது. வாலை பின்னங்கால்களுக்கிடையில் செருகிக்கொண்டு காட்டுக்குள் ஓடி பற்றைக்குள் பதுங்கிவிட்டது.

**உதவி 1:** ஆமாம் வேறு என்னதான் செய்வது?

**குழுத்தலைவர்:** காகமும் மரப்பொந்துக்குள் வைத்த வடையை மீண்டும் எடுத்து ஆறுதலாக சாப்பிட்டு பசி ஆறிய பின் காகா என்று கத்தியபடி தன் இருப்பிடம் நோக்கிப் பறந்து சென்றது

**உதவி:** ஆமாம் இதிலிருந்து நமக்கு கிடைக்கும் படிப்பினை என்னவென்று அறியலாமா?

**குழுத்தலைவர்:** என்னதான் கெட்டித்தனமாக ஒருவர் மற்றவர்களை ஏமாற்றி பிழைத்து வந்தாலும் என்றோ ஒருநாள் எவரிடமாவது மாட்டிக் கொள்வார். மொக்கயீனப்படுவார். சிலரை பல காலம் ஏமாற்றலாம். பலரை சில காலம் ஏமாற்றலாம். ஆனால் எல்லாரையும் எல்லா காலமும் ஏமாற்ற முடியாது. என்பதே இதன் மூலம் நாம் பெற்றுக்கொள்ளும் பாடம்.

**உதவி 1:** அதனால் நாம் எவரையும் ஏமாற்றவும் வேண்டாம்

**உதவி 2:** எவரிடமும் நாம் ஏமாறவும் வேண்டாம்.

**குழுத்தலைவர்:** ஏமாறுபவர்கள் இருந்தால்தான் ஏமாற்றுகிறவர்கள் தோன்றுவார்கள்.
வந்திருக்கும் சபையோர்களே!

இதுவரை நாங்கள் வழங்கிய நரியின் கதையையும் அதன்மூலம் எமக்கு கிடைத்த படிப்பினையையும் அன்போடும் பண்போடும் இருந்து கேட்டு மகிழ்ந்த உங்களுக்கு மீண்டும் வணக்கம் கூறி விடை பெறுகின்றோம்.

**நன்றி!**

**மங்களம்! சுப மங்களம்! மங்களம்!**


## ஆசிரியர் பற்றிய சிறு குறிப்பு


*இவ் வில்லுப்பாட்டினை எழுதி வழங்கியுள்ள எஸ்.பெருமாள் தொழில்ரீதியில் இதழியலாளர் ஆவார். அந்தவகையில் 50 வருடங்களுக்கும் மேலான அனுபவம் கொண்டவர். சிறுகதைகள், தொடர்கதைகள், சமூக, அரசியல் கட்டுரைகள் மற்றும் கவிதை எழுதுதலிலும் கால் பதித்தவரான இவர், பத்திரிகைத்துறை தொடர்பான ஒரு நூலையும், இரண்டு கவிதைத் தொகுப்புகளையும் வெளியிட்டுள்ளார். ஊடகத்துறைக்கான நல்லூர் பிரதேச கலாசாரப் பேரவையின் கலைஞானச்சுடர் விருதும் மத்திய அரசினால் வழங்கப்படும் ஊடகத்துறைக்கான 'கலாபூஷணம்' விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டவர்.*

*பதிப்பாளர்*

*மூத்த இதழியலாளர் எஸ்.பெருமாளின் நூல்கள்*

1. *ஊடகத்துறை - சில நினைவுக் குறிப்புகள்(2002)*
2. *நடந்தபடி தேடுவோம் - கவிதைத்தொகுப்பு (மார்கழி 2016)*
3. *யாருக்குச் சொந்தம் இந்தக் குழந்தை யாருக்குச் சொந்தம் - கவிதைத்தொகுப்பு (மார்கழி 2017)*
4. *எத்தனைகாலம்தான் ஏமாற்றுவார் - சிறுவர்களுக்கான ஒரு வில்லுப்பாட்டு (செப்டம்பர் 2018)*



"KALAA P OOSHANAM"
K.S.SIVAG NANA JAH
RETIRED V CE PRINCIP
ADIVAPA THAM ROAD
KOKU VIL WEST

